**தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை—6**

**ந.க.எண்.039747/எம்/இ1/2018, நாள்:  .07.2018**

**பொருள்:** பள்ளிக் கல்வி – காவேரி நியூஸ் தனியார் தொலைக்காட்சி சார்பில் "நம்ம ஊரு விஞ்ஞானி – 2018" எனும் நிகழ்ச்சியை அனைத்து விதமான பள்ளிகளிலும் நடத்திட உள்ளது – அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் – சார்பு.

**பார்வை:** காவேரி நியூஸ் தனியார் தொலைக்காட்சி நிறுவனக் கடிதம் நாள்.09.07.2018.

******

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க, காவேரி நியூஸ் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் "நம்ம ஊரு விஞ்ஞானி – 2018" எனும் பள்ளி மாணவர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிவிக்கின்ற உன்னத நிகழ்ச்சியை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நடத்திட திட்டமிட்டுள்ளது. இந்நிகழ்ச்சி ஜீலை 2018 முதல் அக்டோபர் 2018 வரை அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவில் மூன்று மாதங்கள் நடத்திடவும், மாவட்ட அளவில் வெற்றிபெறும் மாணவர்களைக் கொண்டு மாநில அளவில் போட்டிகள் நடத்திட திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் வெற்றிபெறும் மாணாக்கர்கள் (ஜீனியர் மற்றும் சீனியர் பிரிவுகளில்) ரஷ்யாவில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு, விண்வெளி வீரர்களிடம் உரையாடுவதற்கு வாய்ப்பளித்தும், செயற்கைகோள் வடிவமைத்தல் குறித்து பயிற்சிகளும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் நிகழ்ச்சி குறித்து மாணாக்கர்களிடையே தலைமையாசிரியர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி பள்ளி மாணாக்கர்களை பங்கேற்கச் செய்திடும் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து முதன்மைக் கல்வி அலுவலருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநர்

13/07/2018

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

நகல்

BOBBY V.K
Vice President –Marketing
Cauvery News
Block No.2 , Plot No.1, 2(NP) 1st Floor, Ekkattuthangal
Guindy, Chennai-32